
Sulekha e press




# மாதர் தம்மை



# Madharthammai

Presents Sujatha Rangarajan's eBook

**Published by** *Sujatha Rangarajan*

**Copyright © 2003** *Sujatha Rangarajan All Rights Reserved*

**Distributed by** Sulekha Epress

**Sulekha, Sulekha.com, Epress, Sulekha Epress, Epress logo and Sulekha logo are trademarks of Smart Information Worldwide Inc.**

NOTICE: This eBook is licensed to the original purchaser only. Duplication or distribution to any person via email, floppy disk, network, print out, or any other means is a violation of International copyright law and subjects the violator to severe fines and/or imprisonment. This book cannot be legally lent or given to others without the written permission of Sulekha.

CONTACT US: Sulekha, 4926 Spicewood Springs Road, Suite 101
Austin, TX 78759, USA

Sulekha, 96 Dr Radhakrishnan Salai, 2nd Floor
Chennai, 600 004, India

epress@sulekha.net



# சுஜாதாவின் முன்னுரை

இந்தக் கதைகள் பெரும்பாலும் இனணய்த்தில் லேசில் கிடைக்காதவை. விகடன் பக்கத்திலும், தேசிகன் பக்கத்திலும் என் கதை கட்டுனரகள் பல உள்ளன. இவைகள் அந்தப் பக்கங்களில் கிடைக்காது தனிப்பட்டு எழுதிய உதிரிக் கதைகள். தீபாவளி மலருக்கோ அல்லது சிறப்பிதழ்களுக்கோ அளித்தவை. இவைகளை சுலேகா அன்பர்களுக்கு பிரத்தியேகமாக அளிப்பதில எனக்கு மகிழ்ச்சி.

இவைகளில் 'திமலா' மட்டும் அம்பலத்திலேயே வெளியாகியுள்ளது. சைன்ஸ் ஃபிக்ஷன் கதைகளில் எனக்குப் பிடித்த ஒன்று என்பதனால் இதை போனசாக கொடுத்துள்ளேன். 'அமுதாவும் அவனும்' மணிரத்னத்தின் 'கன்னத்தில் முத்தமிட்டால்' திரைப்படத்தின் ஒரு காட்சிக்காக எழுதபட்ட சிறுகதை. இது படத்தில் எப்படி காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அந்தப் படத்தைப் பார்த்த வாசகர்கள் நினைவு கொள்ளலாம். அல்லது விசிடி / டிவிடியில் பார்க்கலாம்.

சிறுகதை பற்றி என்னை அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளையும் இங்கு மறுபிரகடனம் செய்திருக்கிறேன். 'சுலேகா' மூலம் நல்ல எழுத்னத ஆதரிக்க இயலும் என்று நம்புகிறேன். முடிந்தால் தேர்ந்தெடுத்து
உங்கள் சந்தேகங்களை தீர்த்துவைக்க ஒரு கேள்விபதில் பகுதியை துவக்க எண்ணியுள்ளோம். ஏறத்தாழ 200 சிறுகதையும் ஐம்பது நாவல்களும் பத்துப்பதினைந்து திரைக்கதைகளும் நாடகங்களைளும் ஊடகங்களில் எழுதியவன் என்கிற தகுதியில் என்னால் இயன்ற வரை நல்ல எழுத்துக்கு உதவுகிறேன்.

# மாதர் தம்மை

''என்ன பாண்டியன்? விலைமாதர்களை அடையாளம் கண்டு பிடிக்க முடியலைன்னா என்ன போலீஸ் அதிகாரி நீங்க? அவங்களை இந்த வாரம் புடிச்சே ஆகணும். தமிழ்நாட்டினுடைய கற்பு என்ன ஆவுறது?'' என்றார் மானிக்லால்.

''எப்படி சார் கண்டுபிடிக்கறது?'' என்றார் பாண்டியன்.

''அமெரிக்க கான்சல் கட்டடத்திலிருந்து நேராக வந்து கதிட்ரல் சாலையில் நகைக்கடை செருப்புக்கடை தரைவிரிப்புக் கடைகளை எல்லாம் தாண்டி எதிரே ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி முனைக்கு எதிரே சந்து திரும்புமே அங்கே ராத்திரி எட்டரை மணிக்கு மேல் நின்றுகொண்டிருப்பார்கள்.'' என்றார் மானிக்லால்.

''புடிச்சு?''

''உள்ள தள்ளணும். சீதா சட்டத்தின்பேர்ல!''

''அடுத்த ஒர்க்கிங் டேல வெளிய வந்துருவாங்க.''

''வரட்டும். அரஸ்ட் பண்ணினோம்ங்கற செய்திதான் முக்கியம். அதுக்கப்புறம் யாரும் அவங்களைக் கண்டுக்கப் போறதில்லை. எல்லா வாரப் பத்திரிகையிலும் படம் போட்டு எளுதிட்டாங்க. போலீஸ் இதற்கு உடந்தை. அவர்களிடம் சில்லறை வாங்கறதாகவும்..''

''நான் போய் பஸ்க்கு காத்திருக்கிற யாராவது குடும்ப பெண்ணை கைது பண்ணிட்டன்னா அதும் ஆள்வார்பேட்டை ஏரியா கொஞ்சம் கௌரவமான ஏரியா. விஐபிங்க எல்லாரும் இருக்கற ஏரியா. பெரிய வம்பா போயிரும்.'' என்றார் பாண்டியன்.

''என்ன பாண்டியன்? உங்களுக்கு குடும்பப் பெண்ணுக்கும் ப்ராஸ்டியுட்டுக்கும் ஆறு வித்தியாசம் உண்டே தெரியாதா? அந்த ஏரியாவுக்கு அந்த டைம்ல குடும்ப பெண்ணுங்க வரமாட்டாங்க. செண்ட்டுலருந்தே கண்டுபிடிக்கலாம். என்ன அதிகாரி நீங்க? கல்யாணம் ஆயிருச்சா?''

''ஏன்?''

''மனைவியை கூட்டிட்டு போங்க. ஒரு பார்வைல எது பத்தினி எது கேசுன்னு சொல்லிருவாங்க.''

''ஸார், எனக்கு இன்னும் கல்யாணம் ஆகலை. எங்கப்பா பெண்களை கண்களா காப்பாத்தி தேவி மாதிரி நெற்றிக்கு இடையில் வெச்சு உபாசனை பண்ணனும்னு சொல்வார். வீடு பூரா அம்மன் படமா வளர்ந்தவன் ஸார்.''

''உங்கப்பா தி.ஜானகிராமன் படிப்பாரோ?'' என்றார் மானிக்லால்.

சிரித்தார். சிறந்த ஜைனர் என்றாலும்கூட வடசென்னையிலேயே வளர்ந்த தமிழர்தான். கண்களில் மையிட்டிருந்தார். படு சைவம். முட்டைகூட தொடமாட்டார்.

''பாருங்க. போட்டோ போட்டு விலாவாரியா எளுதிட்டான்'' என்று மேசைமேல் இருந்து அதை அவர்பால் வீசினார்.

அட்டைப்படத்து மஞ்சள் எழுத்துக்கள் பலான பெண்கள் உலா! போலீஸ் மெத்தனம்! என்று கதறின.

ப்ளாஷ் பளிச்சிடுவதை கைப்பையால் மறைத்த ஒரு பெண்ணின் புகைப்படமும் இருந்தது.

''கஸ்டமர் மாதிரி போங்க. -------போவாதீங்க. ராத்திரி எட்டரைக்கு மேலதான் உலா வராங்களாம். எல்லாம் புட்டு புட்டு வச்சிருக்கானுங்க. பாண்டியன் அந்த கட்டுரையை மேய்ந்தபோது...

''பவுடர் சுந்தரிகள் அங்கும் இங்கும் லுக் விட்டபடி கையில் ஸ்கார்ப் சுற்றி நிற்பார்கள். அதுதான் அடையாளம். கஸ்டமர் வருவார். நிற்பார். பொதுவாக விரல் பாஷையில் மிக சுருக்கமாக வியாபாரம் பேசப்படுகிறது. ரேட்டு நைட்டு. இரண்டு வார்த்தைகள் மட்டும்தான் பிரயோகமாகும். அதன்பின் அவர்களை உரிய உசித வாகனத்தில் அழைத்துச் செல்லலாம். (தேசிய வாகனம் ஆட்டோ) ஏறிக் கொள்வார்கள். இடம் பொருள் ஏவல் எல்லாம் அவர்கள் ஏற்பாடே. கையில் ஒரு கவார்ட்டர் எடுத்துச் செல்வது சிறப்பு. எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்ச்சி (தற்செயலான வார்த்தைப் பிரயோகத்துக்கு மன்னிக்கவும்) இவர்கள்பால் இருப்பதால் காண்டம் கொண்டு வருவார்கள். கவலுறேல்.

''இது என்ன பாஷைங்க?''

''தமிழ்தான். இன்வெஸ்டிகேட்டிவ் ஜர்னலிசம். ஏழுமலைன்னு ஒரு கான்ஸ்டபிளை அழைச்சுட்டு போங்க. ஏரியா முழுக்க தெரிஞ்சவர்.''

எட்டரை மணி சுமாருக்கு பாண்டியன் காதிபவனில் வாங்கிய சிமெண்ட் கலர் ஜிப்பா அணிந்துகொண்டு அமெரிக்க நண்பன் கொடுத்திருந்த பின்ஷவரக் கலங்கலை அணிந்து வழியில் ஒரு கல்கத்தா பான் வாங்கி மணக்க மணக்க அதை சுவைத்துக் கொண்டு கண்டாலாவுக்கு கூப்பிடும் ஆமிரகான் போல கழுத்தில் கைக்குட்டை கட்டி நின்றார். ராஜாகாப்ஸ்லிருந்து ஒரு டீசல் அம்பாசிடர் டிஎன்09-1818 எடுத்து வந்திருந்தார். கான்ஸ்டபிளை உள்ளே உட்கார வைத்தார். ஏழுமலை தொப்பையை அடக்கும் எண்ணத்தை கைவிட்ட பொத்தான்கள் கொண்ட புஷ்கோட்டு அணிந்திருந்தார். ராதாகிருஷ்ணன் சாலைவரை சென்று பச்சை கிடைத்து யு டர்ன் அடித்து திரும்பி அண்ணா மேம்பாலம்வரை வந்து சுற்றி வந்து மீண்டும் சர்ச்சைக்குரிய பிரதேசத்தைக் கடந்தார். யாரும் இல்லை. ஒரு கந்தல் உடை இந்தியன் இரவு படுக்கத் தயாராக ப்ளாட்பாரத்தில் அண்மையில் கடந்த பேரணியில் கிடைத்த 'வெள்ளமெனத் திரண்டு வாரீர்' போஸ்டரை விரித்துக் கொண்டிருந்தார்.

"இன்னிக்கு என்ன விடுமுறையா ஏழுமலை? யாரையும் காணம்?"

"இதுக்கெல்லாம் விடுமுறை கிடையாதுங்க."

"நீங்க பாத்திருக்கிங்களா ஏழுமலை?"

"பாப்பேங்க."

"கேசுன்னு தெரியும்?"

"தெரியும்."

"தெரிஞ்சும் அரஸ்ட் பண்ணமாட்டிங்க."

"மாட்டேங்க."

"ஏன்?"

"இதெல்லாம் நம்மளால ஒழிக்க முடியாதுங்க. சங்க காலத்திலிருந்து இருக்குதுங்க" என்றார் தத்துவ ரீதியில்.

"போலீஸ் இப்படி மெத்தனமா இருந்தா எப்படிங்க?"

"இவங்களால எதும் பிரச்னை இல்லைங்க. எய்ட்ஸ் பத்தி தெரியும். உரை வெச்சிருப்பாங்க. அப்பப்ப மெடிக்கல் செக் அப் கூட உண்டுங்க. எதோ ஒரு விதத்துல ஒரு சமூகத்தின் தேவையை பூர்த்தி செய்யறாங்கன்னு தலைவர் சொல்வாரு."

"யாரு உங்க தலைவர்?"

"தேனாம்பேட்டை சத்யநாதன்ங்க. உங்களை ஒருமுறை சந்திச்சிருக்கார். சாலை மறியல்போது கண்டன ஊர்வலத்துக்கு பர்மிசன் வாங்க வந்தார். எத்தனை கண்டார ஓளிங்க வெளிய நடமாறங்க. இவங்க ஏதோ பத்து அம்பது சம்பாரிச்சு தங்கச்சிங்களுக்கு படிப்பு செலவு பாமாயில்னு

உழைப்பாளி வர்க்கம்ங்க. இவங்களை கைது பண்றதில அர்த்தமே இல்லை. எதையும் நிறுத்த முடியாதுங்க.''

''ஏழுமலை, பிலாசபி இதோ நிறுத்திக்கங்க. இன்னிக்கு இவங்களை பாத்தா உள்ள தள்றோம். அவ்வளவுதான். மேல பேச்சில்லை.''

''சரிங்க'' என்று உள்ளங்கையில் எதையோ உதிர்த்து வாயில் போட்டுக் கொண்டார்.

''எத்தனை பொண்ணு வேணுங்க.''

''ரெண்டு மூணாவது.''

''ஒருத்தியை புடிச்சுட்டா அவளே சொல்லிருவா எந்த சந்தில யார் யாரு நிக்கிறாளுவன்னு''

''அப்டிங்களா? இதில் ரொம்ப ஊறினவருபோல ஏழுமலை.''

''எல்லாத்தையும் பாத்துட்டங்க.''

என்ன அர்த்தத்தில் ஏழுமலை அப்படிச் சொன்னார்' என்று வியப்பதன் முன், ''பாருங்க, அதாங்க கேசு. டிரைவர் கொஞ்சம் சுலோ பண்ணுங்க.''

''இதாங்க தலைமயிரை வெட்டிட்டு பையை சுளட்டிக்கிட்டு வெடவெடன்னு நிக்குது பாருங்க.''

அந்தப் பெண் அரையிருட்டில் நின்றுகொண்டிருந்தாள். ஏழுமலை சொன்னதுபோல் நல்ல உயரமாக இருந்தாள். உடலுக்கு சற்றே இறுக்கமாக.

''என்ன டைட்டா டிரஸ் போட்டிருக்கா பாத்திங்களா ஏழுமலை?''

''இதுக்கு பேரு லாச்சான்னு சொல்வாங்க.'' ஏழுமலைக்குத் தன் மகள் மூலம் இந்த டிரஸ் போக்குவரத்துக்களெல்லாம் தெரியும்.

அந்தப் பெண் பொதுவாக உலகத்துடன் தனக்கு எந்த வழக்கும் இல்லாததுபோல் நின்றுகொண்டிருந்தாள்.

அப்படி நின்றுக் கொண்டிருந்தவள் உண்மையிலேயே விலைமாதல்ல. ஆயிரம் விளக்கு அனைத்து மகளிர் காவல் நிலையத்தைச் சேர்ந்த ஜோதி என்கிற போலீஸ் அதிகாரி.

ஸ்டெல்லா மேரிஸ் மாலைக் கல்லூரி விட்டதும் அங்கு பஸ் பிடிக்க வரும் மாணவிகளிடம் ஈவ் டீஸிங் செய்யும் ரௌடிகளால் பெண்கள் மிகவும் பாதிக்கப்படுவதாக ப்ரின்சிப்பாலிடமிருந்து புகார் வர இந்த ஆண்களை கையும் களவுமாகப் பிடிக்க சற்றே வயது குறைவாக ஏறக்குறைய மாணவி போலத் தோற்றமளித்த ஜோதியை சூப்ரண்ட் தேர்ந்தெடுத்திருந்தார்.

''கொஞ்சம் தள்ளியே கான்ஸ்டபிள்களை வரச் சொல்லவா ஜோதி?''

''வேணாம் ஸார்.''

''தனியா போறது கொஞ்சம் ரிஸ்க்மா.''

''வேணாம் ஸார். ஏதாவதுன்னா இருக்கவே இருக்குது ஜாலாக் கராத்தே.''

''கிளாஸ் போயிருக்கியா?''

''ஆமா ஸார். பொம்பளைன்னு எந்த சலுகையும் எடுத்துக் கொள்ளக்கூடான்னு எங்கப்பா சொல்லியிருக்கார். கிரேட் மேன் சந்திரன்.''

எனவே அந்த கல்லூரியின் எதிரே திருப்பத்தில் பேருந்து நிறுத்தத்தில் ஜோதி சற்று இறுக்கமான லாச்சா என்னும் தன் தங்கை டிரஸ்ஸை அணிந்துகொண்டு கைப்பையை சுழற்றிக் கொண்டு காத்திருக்க...

''நீங்க போறிங்களா? நான் போனா கதை வேற மாதிரி ஆயிரும்'' என்றார் ஏழுமலை.

''என்ன கேக்கணும்?''

''ரெண்டு பேர் இருக்கோம் வரியான்னு?''

''சாட்சிக்கு சொலிஸிட்டிங் தேவைப்படும் இல்லையா?''

''அதுவந்து ஒராளா ரெண்டா அடுத்து எங்க போவணும்னு அதுவே சொல்லும். அதிகம் பேசாதீங்க. டிடிகே ரோடில ஒரு ஒயின் ஸ்டோரு பாதி மூடியிருக்கும். அங்க வெந்த கடலையும் க்வர்ட்டரும் வாங்கிக்கணும். அப்புறம் நேரா அடையார் கேட்டுவரை போயிட் போட் கிளப் ரோடு பக்கம் போகலாம். இல்லை பீச்சு பக்கம்மான்னு தீர்மானிக்கலாம்.''

''நிறுத்துப்பா.''

அந்தப் பெண்ணின் அருகில் சிநேகமாக நின்றது கார்.

''கேளுங்க.''

பாண்டியன் சன்னல் கண்ணாடியை இறக்கி ''பார்ட்டி வருதா?'' என்றார்.

அந்தப் பெண் திரும்பி பாண்டியனைப் பார்த்தாள்.

இவன்தான். இப்படியே பிடித்துவிடலாமா? இல்லை. இல்லை. சற்று தாமதிக்கலாம்.

''ரெண்டு பேர் இருக்கம் வரியா?''

''நாங்களும் ரெண்டு பேரு இருக்கம் வரியா?'' என்றாள்.

''சொன்னேன் பாத்திங்களா? ரெண்டையும் புடிச்சு போட்டுருடலாம்'' என்று கிசுகிசுத்தார் ஏழுமலை.

''இங்கேயே வச்சுக்கலாமாடி'' என்றார்.

''இல்லை. நான் கூட்டிட்டு போறன்.''

''ஏறிக்க.''

ஜோதி தைரியமான பெண், தயக்கமில்லாமல் ஏறிக்கொண்டாள். என்ன ஆகிவிடும்.

ஏழுமலை உள்விளக்கைப் போட்டு ''உன்னைய எங்கயோ பாத்திருக்கேன்.''

''உன்னையும் நான் பாத்திருக்கேன்.''

''பேர் என்ன?''

''மனிஷா கொய்ராலா.''

''நல்ல ஜோக்கு. எங்கயாவது ரெஸ்டாரண்டுக்கு போகலாமா?''

''இல்லை. நான் கூட்டிட்டுப் போறேன்.''

''எங்க போகணும்?''

''நேராப் போய் ரொயப்பேட்டா ஐரோடு சிக்னல்ல திரும்புங்க. நிறையப் பேர் காத்திருக்காங்க.

''சரியா உக்காரு. வெக்கப்படாத. யாரு தெரியுமில்லை. பெரிய பிலிம் ப்ரட்யூசர் மகன்.''

''பாத்தாலே தெரியுது. நீ யாரு லைட்பாயா?''

''டமாசா பேசுறியே. ஒனக்குத்தான் லைட் தேவையில்லையே? ஆமா என்ன ரேட்டு?''

''உங்க இஷ்டம்.'' ஜோதிக்கு இது மிகவும் பிடித்திருந்தது. தன்னிச்சையாக வசனம் புறப்படும் வீதி நாடகம்போல. ''என்ன வாடிக்கையோ அதை குடுங்க விலைவாசி என்ன ஆறது?''

''இங்கதான் திரும்பி நேரா போங்க.''

''போனாப் போச்சு'' என்றார் ஏழுமலை.

டாக்சி சற்று தூரம் சென்றது. ஜோதி சற்றே பதற்றப்பட்டாள். இவனைப் பார்த்தால் ரௌடிபோலத் தெரியவில்லை. கண்ணாடி வழியாக ஜீப் வருகிறதா என்று பார்த்தாள். கடைவீதியின் சுறுசுறுப்பு அடங்கியிருந்தது.

ஓட்டல்களில் நாற்காலிகளை கவிழ்த்துக் கொண்டிருந்தார்கள்.

சிறுவர்கள் அலம்பிக் கொண்டிருந்தார்கள்.

''இங்கதான்.''

''கில்லாடிம்மா. போலீஸ் ஸ்டேஷன் பக்கத்திலேயே பிசினஸ் நடத்தற?''

''இங்கதான். ரொம்ப பத்திரம். வாங்க பயப்படாம வாங்க.''

பாண்டியனும் ஏழுமலையும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள ''ஏழுமலை போதும் புடிச்சுரலாம்'' என்றார் பாண்டியன்.

''எறங்கு'' என்றார்.

அதே சமயம் அவள் ''எறங்குடா'' என்றாள்.

''எறங்குடாவா?''

''ஆமாம்டா பொறுக்கி பசங்களா. பொம்பளை ஒருத்தி நின்னா உடனே அவளை படுக்கைக்கு கூப்பிடுவியா. உள்ள போ உள்ள போ.''

பாண்டியன் இந்த நான்சென்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்கிற நிமித்தத்தில் அவள் கையை இழுத்து ''யாருய்யா டூட்டில'' என்று அந்தக் காவல் நிலையத்தில் உள்ளே சென்று அவளை இழுத்தபோது ''இது நம்ம ஸ்டேஷன்தான் ஏழுமலை.'' அந்தப் பெண்ணை கையை இழுத்தபோது...

அவள் அவர் கையை பின்பக்கமாக மடக்கி முழங்காலால் அவருடைய மர்மஸ்தானத்தில் உதைக்க, ஒரு அமானுஷ்யமான சப்தம் வெளிப்பட்டது.

ஏழுமலை தன் தாயை விளித்து சரிந்து உட்கார..

கராத்தே தெரிந்த பாண்டியன் அவளைப் பற்றி தன்பால் இழுத்து..

முகத்தில் உள்ளங்கையை வைத்து அழுத்தித் தேய்க்க அவள் மூக்கில் ரத்தம்வர கைக்குட்டையை எடுத்து, ''கான்ஸ்டபிள் பிடிங்க அவனை'' என்று சொல்ல அந்த கான்ஸ்டபிள் பாண்டியனுக்கு சல்யுட் அடிக்க பொதுவாக அந்த இடத்து அமைதி குலைந்தது.

இதற்கு இரண்டு மாருதி ஜிப்சிக்கள் வந்து யார் யார் யார் யாரை அரஸ்ட் பண்ணுகிறார்கள் என்கிற குழப்பம் நீக்கம் ஆக ஏறத்தாழ ஒருமணி நேரம் ஆயிற்று.

பாண்டியனும் ஜோதியும் அருகே இருந்த பிலால் ஓட்டலில் நடு ராத்திரியில் காட்டமான டீ ஆர்டர் செய்தார்கள்.

ஜோதியின் உள்மூக்கு உடைந்து இன்னமும் ரத்தம் கசிந்து கொண்டிருக்க, ''ஸாரிங்க, கொஞ்சம் ஐஸ் கொடுப்பா. ஸாரிங்க அடி பலமாயிருச்சு போல'' என்றார் பாண்டியன்.

அவரால் கைதூக்க முடியவில்லை. ஜோதி வளைத்துப் பிடித்ததில் அது சுளுக்கா எலும்பு முறிவா தெரியவில்லை.

''நல்லவேளை! பத்திரிகைகாரங்களை கூப்பிடறதா இருந்தேன்'' என்றாள் ஜோதி.

''ஏங்க இந்த மாதிரி ரெய்டு போறம்னு நீங்க தகவல் சொல்ல மாட்டிங்களா?'' என்று இருவரும் ஒரே சமயத்தில் கேட்டு சிரித்துக் கொண்டார்கள்.

அதிகம் சிரித்ததில் மறுபடி ஜோதியின் மூக்கில் ரத்தம் தெரிய அதை தன் கைக்குட்டையால் பாண்டியன் துடைத்துவிட்டார்.

பாண்டியன் தன் எதிர்கால மனைவி ஜோதியை சந்தித்த கதை இது